DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions,  Sankarankovil)
S.C.No.  691/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW 9

LW 8

| | | |
|---|---|---|
| Name | : | **பாலமுருகன்** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **11.11.2025** |

**( A1 to A5 absent.  317 crpc petition  filed and allowed.  )**

Solemnly affirmed  by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான்  மீன்துள்ளியில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1, 2, 3, 4 நபர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். வழக்கின் சம்பவம் குறித்து எனக்கு ஏதும் தெரியாது. இந்த வழக்கில் காயப்பட்ட அ.சா.1,2,3,4 நபர்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில்  அனுமதி அளித்து  அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 29.10.2016 ம்தேதி போலிசார் என்னை விசாரித்தாகவும் தீபாவளி பண்டிகை அன்று அ.சா.1 முதல் அ.சா.4, அ.சா.5 மற்றும் நானும் பேசிக் கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் கலகம் செய்யும் நோக்கத்தோடு கையில் அருவாளுடன் வந்து அ,சா,2 யை பார்த்து மருத்துவர் ராணிக்கும் எங்களுக்கும் உள்ள பிரச்சினையில் நீ எப்படி தலையீடலாம் என்றும், சின்ன பிள்ளைகள் விளையாடும் இடத்தில் பட்டாசு வெடிக்கிற என்று அசிங்கமாக பேசியதாகவும் அப்போது 1ம் எதிரி தன் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் அ.சா.2 யை இதோடு செத்து தொலை என்று தலையில் அடித்ததாகவும் மேலும் அ.சா.2, முதல் அ.சா.4 வரையிலானவர்களை எதிரிகள் தாக்கியதாகவும் அப்போது செத்து தொலையுங்கள் என்று கொலை மிரட்டல் விடுத்தாகவும் தற்போது போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் ஆஜர் எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)
(In the Court of the Assistant Sessions, Sankarankovil)
S.C.No. 691/2018
*****

Deposition of Witness for Prosecution witness No: PW 10

LW 11

| | | |
|---|---|---|
| Name | : | **பேச்சிமுத்து** |
| Father`s Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | **11.11.2025** |

**( A1 to A5 absent. 317 crpc petition filed and allowed. )**

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் கீழநீலிதநல்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பணவடலிசத்திரம் காவல் நிலையத்திற்கு வேறு ஒரு வழக்கு சம்மந்தமான சென்ற போது பணவடலிசத்திரம் போலிசார் என்னிடம் எழுதாத இரண்டு வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். அது என்னிடம் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது. அது அ.சா.ஆ.4 ஆகும். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.5 ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை அனுமதி கோரியதன் பேரில் அனுமதி அளித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலிசார் விசாரணையில் கடந்த 30.10.2016ம் தேதி போலிசார் என்னை விசாரித்தாகவும் அப்போது இந்த வழக்கின் எதிரி சங்கரபாண்டியன் இந்த வழக்கு சம்பவம் குறித்து தான் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த மாடசாமி மகன் பேச்சிமுத்து கையொப்பம் செய்ததாகவும் மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியபடி அன்றையதினம் 5.30 மணிக்கு இந்த வழக்கின் 2ம் எதிரி இராஜசுகுமாரன் என்பவர் வீட்டில் இந்த வழக்கின் சம்பவத்திற்கு தான் பயன்படுத்திய சுமார் 30 செ.மீ இரும்பு பாகமும் 11 செ.மீ கொம்புபிடியுடன் கூடிய மொத்தம் 41 செ.மீ உடைய இரும்பு அருவாள் ஒன்று. 121 செ.மீ நீளமும், 2 செ.மீ சுற்றளவு கொண்ட கம்பி ஒன்று எதிரி சங்கரபாண்டியன் எங்கள் முன்பு எடுத்து கொடுத்ததை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் கையொப்பம் செய்து விட்டும் போலிசார் என்னை விசாரித்தபோது கூறிவிட்டு எதிரிகள் எனது உறவினர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.